தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.144/மா/2025
நாள் 30.04.2026

மா. சிவராஜ்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 094, சூளைமேடு. வரதராஜப்பேட்டை மெயின் ரோடு, கதவு எண் 08 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மா.சிவராஜ் என்பவரின் 24.01.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 25.01.2025 அன்று பெறப்பட்டு 144/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:–

## ஆணை

சென்னை–600 094, சூளைமேடு. வரதராஜப்பேட்டை மெயின் ரோடு, கதவு எண் 08 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மா.சிவராஜ் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பியுள்ள 11.11.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:–

"எனக்கு சொந்தமான வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் Plot No. 11, New Door No.31. Old Door No.15, டிரஸ்டுபுரம் 1–வது குறுக்கு தெரு, கோடம்பாக்கம், சென்னை–24 என்ற முகவரியில் தளம் ஒன்றுக்கு சுமார் 10,000/– சதுரடி என நான்கு தளத்தில் SUNDARAM By Meenam Constructions Pvt. Ltd என்ற அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிட உரிமையாளர் கட்டிடம் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடங்களில் காணலாம். மேற்படி, பல ஆயிரம் சதுரடி உள்ள இக்கட்டிடத்திற்குள் EB Transform மற்றும் Box–கள் அமைக்காமல் நடைபாதையை ஆக்கிரமித்து EB Transform மற்றும் EB Box அமைத்துள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். ஆகவே, சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட EB Box, Transform, Steps & Ramp இரும்பு பைப்புகளை அகற்றவும்:

Petition 2:- கோடம்பாக்கம்,

டிரஸ்ட்புரம், 6–வது குறுக்கு தெரு என்ற முகவரியில் Enclave என்ற தளம் ஒன்றுக்கு 10,000 சதுரடி என 4 தளத்திற்கு மேல் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு பணிமுடியும் தருவாயில் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிட உரிமையாளர் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Concrete Steps & Ramp–கள் அமைத்துள்ளதை, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். மேற்படி, மாநகராட்சி நடைப்பாதையை ஆக்கிரமித்து ராட்சத Concrete தூண்கள் அமைத்து

EB Box and Transform அமைத்துள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இதுபோல் ஆக்கிரமித்து Steps & Ramp கட்டுவதால் பாதசாரிகள் நடப்பாதையை பயன்படுத்த முடியாமல் சாலையில் நடந்து சென்று மனுதாரரும் மற்றும் இப்பகுதி பொது மக்களும் விபத்தில் சிக்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழைநீர் கால்வாயில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைப்பட்டு குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் சூழ்கிறது. ஆகவே, இம்மனுவை கண்ட 7 தினங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் பதில் அளிக்கும் மறுக்கும் பட்சத்தில் உயர் அதிகாரிகளுக்கும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அதிகாரிகளுக்கு புகார்கள் அளிக்க நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, மண்டல அலுவலரை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 உதவி ஆணையர் தனது கடிதம் ம.அ.9 ந.க. எண் 08023/2026 நாள் 08.04.2026—ல் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

“மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட ட்ரஸ்ட்புரம் 1—வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை—600 024ல் உள்ள மனை எண்.11, புதிய கதவு எண்.31 பழைய எண்.15—ல் மற்றும் 29, ட்ரஸ்ட்புரம் 6வது குறுக்கு தெரு உள்ள கட்டிடத்தில் சாய்வுதளம் மற்றும் படிகள் அமைத்ததன் மூலம் சாலை மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்துள்ளதாகக் கோரப்பட்ட மனுவின் அடிப்படையில், உதவிப் பொறியாளர் அவர்கள் 25.06.2025 அன்று அவ்விடத்தை ஆய்வு செய்தார். இவ்வீட்டின் சாய்வுதளம் மற்றும் படிகள் ஆகியவை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை மாநகராட்சி அறிவுறுத்தலின் பேரில் கட்டிட உரிமையாளர்கள் சாய்வு தளம் மற்றும் படிகளை இடித்து அகற்றி விட்டனர் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 10.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

“எனக்கு சொந்தமான வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் Plot No. 11, New Door No. 15 டிரஸ்டுபுரம் 1—வது குறுக்கு தெரு, கோடம்பாக்கம், சென்னை.24 என்ற முகவரியில் தளம் ஒன்றுக்கு சுமார் 10,000/— சதுரடி என நான்கு தளத்தில் SUNDARAM By Meenam Constructions Pvt. Ltd என்ற அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. இக்கட்டிட உரிமையாளர் கட்டிடம் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடங்களில் காணலாம். மேற்படி, பல ஆயிரம் சதுரடி உள்ள இக்கட்டிடத்திற்குள் EB Transform மற்றும் Boxகள் அமைக்காமல் நடைபாதையை ஆக்கிரமித்து EB Transform மற்றும் EB Box அமைத்துள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். ஆகவே, சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட EB Box and Transform Steps & Ramp இரும்பு பைப்புகளை அகற்றவும்:

<u>Petition 2</u>:- கோடம்பாக்கம்,

டிரஸ்ட்புரம் 6—வது குறுக்கு தெரு என்ற முகவரியில் Enclave என்ற தளம் ஒன்றுக்கு 10,000 சதுரடி என 4 தளத்திற்கு மேல் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு பணிமுடியும் தருவாயில் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிட உரிமையாளர் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Concrete Steps & Rampகள் அமைத்துள்ளது. மேற்படி, மாநகராட்சி நடைப்பாதையை ஆக்கிரமித்து ராட்சத Concrete தூண்கள் அமைத்து EB Box and Transform அமைத்துள்ளார். இதுபோல்

ஆக்கிரமித்து Steps & Ramp கட்டுவதால் பாதசாரிகள் நடப்பாதையை பயன்படுத்த முடியாமல் சாலையில் நடந்து சென்று மனுதாரரும் மற்றும் இப்பகுதி பொது மக்களும் விபத்தில் சிக்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழைநீர் கால்வாயில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைபட்டு குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் சூழ்கிறது. எனவே, மேற்கண்ட மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் 10.09.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட ட்ரஸ்ட்புரம் 1வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை–24ல் உள்ள மனை எண்.11, புதிய கதவு எண்.31 பழைய எண்.15–ல் மற்றும் 29, ட்ரஸ்ட்புரம் 6வது குறுக்கு தெருவில் உள்ள கட்டிடத்தின் சாய்வுதளம் மற்றும் படிகள் அமைத்ததன் மூலம் சாலை மற்றும் நடைபாதை ஆக்கிரமிப்பு தொடர்பான மனுவின் அடிப்படையில், மாநகராட்சி உதவிப்பொறியாளர் அவர்கள் 25.06.2025 அன்று அந்த இடத்தினை ஆய்வு செய்தார். அவ்வீட்டின் சாய்வுதளம் மற்றும் படிகள் ஆகியவை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ளதை கள ஆய்வில் கண்டறியப்பட்டு 01.04.2026 அன்று மேற்கண்ட ஆக்கிரப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

EB Box அனைத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் அகற்றப்படவில்லை மற்றும் மின்வாரிய துறை சார்ந்த புகாராகும்.

மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதற்கான புகைப்பட நகல்களை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தன்னுடைய சொந்த வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் சென்னை.24, கோடம்பாக்கம், டிரஸ்டுபுரம், 1–வது குறுக்கு தெரு, Plot No. 11, பழைய எண் 15, புதிய கதவு எண் 31 என்ற முகவரியில் கட்டப்பட்ட கட்டிடமானது, தளம் ஒன்றுக்கு சுமார் 10,000/– சதுரடி என நான்கு தளத்தில் SUNDARAM By Meenam Constructions Pvt. Ltd என்ற அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டது என்பதும், பல ஆயிரம் சதுரடி உள்ள இக்கட்டிடத்திற்குள் EB Transform மற்றும் EB Boxகள் அமைக்காமல் நடைபாதையை ஆக்கிரமித்து EB Transform மற்றும் EB Box அமைக்கப்பட்டது என்பதும். சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட EB Box and Transform Steps & Ramp இரும்பு பைப்புகளை அகற்றமாறும், மேலும் கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம், 6–வது குறுக்கு தெரு என்ற முகவரியில் கட்டப்பட்ட Enclave என்ற கட்டிடத்தின் உரிமையாளரால் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதைகளை ஆக்கிரமித்து Concrete Steps & Rampகள் அமைத்தும், அவ்விடத்தில் EB Box and Transform அமைக்கப்பட்டுள்ளது என்பதும், எனவே அவ்விடத்தினை பாதசாரிகள் பயன்படுத்தாமல் சாலையில் நடந்து செல்ல வேண்டியுள்ளதால், மனுதாரரும் மற்றும் இப்பகுதி பொது மக்களும் விபத்தில் சிக்கும் நிலை ஏற்படுகிறது என்பதும், மழைநீர் கால்வாயில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைபட்டு குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் சூழ்கிறது என்பதும், மேற்கண்ட மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட ட்ரஸ்ட்புரம் 1வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை–24ல் உள்ள மனை எண்.11, புதிய கதவு எண்.31 பழைய

எண்.15–ல் மற்றும் 29, ட்ரஸ்ட்புரம் 6வது குறுக்கு தெருவில் உள்ள கட்டிடங்களின் முன்புறம் உள்ள சாலை மற்றும் நடைபாதை ஆக்கிரமிப்பு செய்து, அங்கு கட்டப்பட்ட சாய்வுதளம் மற்றும் படிகள் ஆகியவை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில் அமைக்கப்பட்டுள்ளதை கள ஆய்வில் கண்டறியப்பட்டு 01.04.2026 அன்று மேற்கண்ட ஆக்கிரப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டன என்பதும், EB Box அனைத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் அகற்றப்படவில்லை மற்றும் மின்வாரிய துறை சார்ந்த புகாராகும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112, கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட ட்ரஸ்ட்புரம் 1வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை–24ல் உள்ள மனை எண்.11, புதிய கதவு எண்.31 பழைய எண்.15–ல் மற்றும் 29, ட்ரஸ்ட்புரம் 6வது குறுக்கு தெருவில் உள்ள கட்டிடங்களின் முன்புறம் உள்ள பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட சாய்வு தளம் மற்றும் படிகள் 01.04.2026 அன்று அகற்றப்பட்டுவிட்டன என்றும் மற்றும் EB Box அனைத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் அகற்றப்பட வில்லை என்றும், அப்பொருட்பாடு மின்வாரிய துறை சார்ந்த புகாராகும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மா. சிவராஜ்,
த/பெ.மாதவராஜ்,
கதவு எண் 8, வரதராஜாபேட்டை மெயின் ரோடு,
சூளைமேடு, சென்னை–600 024.
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.
3) உதவி ஆணையர், மண்டலம் 9,
4 லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–600 034.
4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.